மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வார விடுமுறை, எட்டு மணி நேர வேலை குறித்து அரசாங்கம் ஏற்கெனவே ஒத்துக் கொண்டு ஆணை பிறப்பித்து விட்டது. பாக்கியுள்ள கோரிக்கைகள் பலவற்றை ஒத்துக்கொண்டிருக்கிறது. மிச்சமுள்ளவை ஆய்வில் இருக்கின்றன.

கைத்தறித் துணிக்குப் பயன்படும் சாயம்

161 **வின—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

1967-68, 1968-69-ம் ஆண்டுகளில் கைத்தறித் துணிக்குப் பயன் படும் 'சாயம்' வெளி நாடுகளிலிருந்து எவ்வளவு ரூபாய்க்குத் தமிழ்நாடு அரசால் இறக்குமதி செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சாயங்களும், ரசாயனப் பொருள்களும் அரசினல் நேரடியாக இறக்குமதி செய்யப்படுவதில்லை. ஆனல் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு நிலையம், கைத்தறி இயக்குநரின் முகவராகப் பணியாற்றி, இப் பொருள்களை இறக்குமதி செய்கிறது. 1967-68, 1968-69-ம் ஆண்டுகளில் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சாயப் பொருள்கள், ரசாயனப் பொருள்களின் விலை காப்புறுதி—சரக்குக் கட்டணத்தின் மதிப்பு முறையே 18.74 லட்சம் ரூபாய், 72.45 லட்சம் ரூபாய் ஆகும்.

162 **வின—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

வெளிநாடுகளிலிருந்து தமிழ்நாடு அரசு இறக்குமதி செய்யும் சாய விநியோகத்தைத் தடை செய்து 1968 டிசம்பர் 3-வது வாரத்தில் சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்தச் சாயம் இறக்குமதி செய்கிற உரிமையைக் கூட்டுறவு சங்கத்தினிடமிருந்து திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குக் கொடுத்ததால்தான் இதுமாதிரி தடை உத்தரவு செய்யப்பட்டது என்பது அவருக்குத் தெரியுமா? அப்படிக் கொடுக்கவேண்டிய அவசியம் என்னவென்று விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சாயம் இறக்குமதி செய்வதற்கு யாருக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. அரசாங்கத்தின் சார்பில், டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸ் சார்பில், ஸ்டேட் சொஸைட்டி ஏஜெண்ட் என்ற முறையில் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது. ஸ்டேட் சொஸைட்டிதான் இறக்குமதி செய்கிறது. வேறு யாரும் இறக்குமதி செய்யவில்லை.